Ti Ta
Nb Zr Ss
Ni Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2015 Company

Tiaano® since '92
Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Feb.18 : 1093 Nos.
  Up to Jan.18 : 1085 Nos.
- **Performance Feb. 18 ...**
  Turnover growth : 4.04%
  Employment growth : -0.70%
  100% Attendance : 9.28%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment – Water Treatment Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashram – Tiaano Vidyashram (CBSE Curriculum)




## அலுவலக உறவு நிர்வாகம்

அலுவலகம் என்பது நமது சொந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய தளமல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.

அலுவலகத்தில் உறவு என்பது, நாம் ஏற்றுக் கொண்ட பணிக்கும் நமக்கும் இடையே இருப்பது தான். வேறு உறவுகள் அங்கே நாடாதிருப்பதே நன்று.

அலுவலகத்தில் நமக்கும் வேறொருவருக்கும் இடையே ஒரே விதமான மன இடைவெளி இருக்க வேண்டும். அது மற்றவர்க்குப் புலனாகும் படி நமது நடத்தை இருக்க வேண்டும். இப்படிப் பழகுகின்ற எளிய ஊழியர், நிர்வாகியாகும் வாய்ப்பு இருக்கிறது. இப்படிப் பழகுகின்ற நிர்வாகி, எளிய ஊழியர்களின் நம்பிக்கையைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

அலுவலகத்தில், யார் சரி, யார் தவறு என்பதைக் காட்டிலும், எது சரி, எது தவறு என்னும் போக்கே அனைவருக்கும் நலம் சேர்க்கும்.

அலுவலகத்தில் எவரோடும் தனிப்பட்ட முறையில் நட்போடு இருக்க வேண்டும். ஆனால் எந்தப்பிரச்சினையையும் சொந்த விருப்பு வெறுப்பின்றி எதிர் கொள்ள வேண்டும். You must have a personal rapport with everyone but you must deal with issues only impersonally.

அலுவலகத்தில், ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய ஒரே உணர்ச்சி குழு மனப்பான்மை. அதாவது Team Spirit.

இந்த குழு மனப்பான்மை தான் குடிமை உணர்வுக்கு (Spirit of citizenship) ஆதாரம்.

இந்த குழு மனப்பான்மை தான் இன்றைய சமுதாயத்தின் பிடரியைக் கவ்விக் கொண்டிருக்கும் பற்பல பிணிகளுக்கும் தீர்வாகும்.

– Mr. V.P.Jeyakumar
Managing Director.

## FUNCTIONAL WISHES




Happy Easter
1st April 2018.

Happy Tamil
New year
14th April 2018.




**Best Wishes from Tiaano Employees**

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
ஆவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.

| | |
|---|---|
| Mr. Mohana Kumar G.S<br>*Production* | 1st April. |
| Mr. Manivannan.G<br>*Coating* | 1st April. |
| Ms. Stella.S<br>*Purchase* | 2nd April. |
| Mr. Abilash. C<br>*Marketing* | 3rd April. |
| Mr. Raveendran.T<br>*Marketing* | 4th April. |
| Mr. Janarthanan.G<br>*Production* | 5th April. |
| Mr. Pullan.M<br>*Production* | 7th April. |
| Mr. Nedunchizhian.A<br>*Production* | 7th April. |
| Mr. Murugan.K<br>*Production* | 8th April. |
| Mr. Ramesh.T<br>*Liaison* | 8th April. |
| Mr. Pasupathi.A<br>*Production* | 15th April. |
| Mr. Jaya Prakash Narayanan<br>*Production* | 18th April. |
| Mr. Muruganantham.N<br>*Production* | 20th April. |
| Mrs. Jayalakshmi.M<br>*Production* | 21st April. |
| Mr. Pragadeesh.K<br>*Design* | 23rd April. |
| Mr. Sivasankar.D<br>*Design* | 29th April. |
| Mr. Shanmugam.N<br>Production | 30th April. |

**Best Wishes from Tiaano Employees**

****

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

கோயிலில் தீர்த்தம் கொடுக்கப்பட்டது. உள்ளங்கைகளில் பத்திரமாய் வாங்கின நண்பனிடம் உடன் வந்தவன் சொன்னான், “நீ எச்சரிக்கையாய் வாங்கி கண்களில் ஒற்றி, இதழ்களில் ஊற்றி, மிச்சத்தைத் தலையிலும் தெளிப்பாய். கொஞ்சம் அலட்சியமாய் இருந்தால் கூட சிந்திவிடும். பத்திரமாய் பாதுகாப்பதாக நினைத்து கைகளில் இறுக்க மூடினாலே விரல் வழியாக வழிந்துவிடும்.

இந்தத் தீர்த்தம் போலவே உறவுகளும் மிகப் புனிதமானவை, அலட்சியம் காட்டினாலும் அதிகமாகப் பிடித்து வைக்க முயன்றாலும் அவற்றை இழந்து விடுவாய்.”

உறவுகளின் பெருமையை உணர்ந்தான் நண்பன்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### தன்னம்பிக்கை

உள்ளத்தில் அச்சமற்ற தன்மை உருவாக்க தன்னம்பிக்கை வலுபெற மறைந்த தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா கூறிய ஞானி – சுண்டெலி கதை.

கண்ணிலே புரை இருந்தால் பார்வை சரியாக தெரியாது. மூக்கிலே அடைப்பு இருந்தால் நறுமணத்தை நுகர முடியாது. வாயிலே புண் இருந்தால் உணவினை சுவைக்க முடியாது. அது போல் சிந்தனை இல்லாவிட்டால், வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது. சிலர் தேவையற்ற அச்சத்திற்கு ஆளாகி, மகிழ்ச்சியான நேரங்களில் கூட மன சஞ்சலத்திற்கு ஆளாகிறார்கள். இந்த வீண் பயத்தை போக்கி துணிச்சலுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

ஒரு ஞானியின் தியானம் கலைந்த போது ஒரு சுண்டெலி, ஞானி முன் வந்தது. சுண்டெலியை பார்த்து ஞானி, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். பூனையை கண்டு எனக்கு பயமாய் இருக்கிறது. என்னை ஒரு பூனையாக மாற்றிவிட்டால், உங்களுக்கு புண்ணியம் உள்ளது என்றது எலி. ஞானி எலியை பூனையாக மாற்றினார்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அப்பூனை வந்து ஞானி முன் நின்றது. பூனையை கண்ட ஞானி, இப்போது என்ன பிரச்சனை என்று வினவினார். என்னை எப்போதும் நாய் துரத்துகிறது. என்னை நாயாக மாற்றிவிட்டால் நன்றாக இருக்கும் என்றது பூனை. உடனே பூனையை, நாயாக மாற்றினார் ஞானி.

சில நாட்கள் கழித்து அந்த நாய் வந்து ஞானியின் முன்பு நின்றது. இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. புலி பயம் என்னை வாட்டி எடுக்கிறது. தயவு செய்து என்னை புலியாக மாற்றிவிடுங்கள் என்றது நாய். உடனே நாயை, புலியாக மாற்றினார்.

சில நாட்கள் கழித்து ஞானி முன் வந்து நின்ற புலி, இந்தக் காட்டில் வேடன் என்னை வேட்டையாட வருகிறான். தயவு செய்து என்னை வேடனாக மாற்றிவிடுங்கள் என்றது புலி. உடனே புலியை வேடனாக மாற்றினார் ஞானி.

சில நாட்கள் கழித்து வேடன் ஞானி முன் வந்து நின்றான். இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. எனக்கு மனிதர்களை கண்டால் பயமாக இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்தான். உடனே இடைமறித்த ஞானி, சுண்டெலியை உன்னை எதுவாக மாற்றினால் என்ன? உன் பயம் உன்னை விட்டு போகாது. உனக்கு சுண்டெலியின் இதயம் தான் இருக்கிறது. நீ சுண்டெலியாக இருக்கத் தான் லாயக்கு என்று கூறி விட்டார் அந்த ஞானி.

ஆகையால், உள்ளத்தில் நம்பிக்கையும், அச்சமற்ற தன்மையும் இல்லாதவரை நாம் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது. உங்களைப் பற்றி நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் ஆவீர்கள். நீங்களே உங்களைப் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். உங்களுடைய எண்ணங்கள் செயலற்று போனால், அச்சம், சோர்வு போன்றவை உடலை கூனாக்கி உள்ளத்தை மண்ணாக்கி விடும்.

*Collected From Internet.*

## தெரிந்து கொள்வோம்

**இந்தியாவில் பல துறைகளில் களமிறங்கிய முதல் பெண்கள் :**

- முதல் பெண் குடியரசுத்தலைவர் : பிரதீபா பாட்டீல்
- முதல் பெண் பிரதமர் : இந்திரா காந்தி
- முதல் பெண் பாராளுமன்ற சபாநாயகர் : மீராகுமார்
- முதல் பெண் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்றவர் : கர்ணம் மல்லேஸ்வரி.
- முதல் பெண் விண்வெளிக்கு சென்றவர் : டாக்டர். கல்பனா சாவ்லா
- முதல் பட்டம் பெற்ற பெண் : காதம்பினி கங்குலி.
- முதல் பெண் போஸ்ட் மாஸ்டர் : கன்வால் வர்மா.
- முதல் பெண் சிற்பி – மணிநாராயிணி
- முதல் எவரெஸ்ட் சிகரம் எறிய பெண் : செல்வி பச்சேந்திரிபால்.
- முதல் ஆட்டோ ஓட்டுனர் உரிமம் பெற்ற பெண் : ஷீலாடோவர்.
- பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண் இசைக் கலைஞர் : எம்.எஸ். சுப்புலெட்சுமி.
- முதல் லட்சம் ரூபாய் ஊதியமாக பெற்ற பெண்மணி : கே.பி. சுந்தராம்பாள்.
- இராணுவ பதக்கம் பெற்ற முதல் பெண்மணி : பீம்லா தேவி.
- முதல் பெண் அமைச்சர் : விஜயலட்சுமி பண்டிட்.
- முதல் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி : அன்னா ஜார்ஜ் மல்ஹோத்ரா.
- முதல் பெண் ஐ.பி.எஸ் அதிகாரி : கிரண்பேடி.
- முதல் பெண் நீதிபதி : அன்னா சாண்டி.
- முதல் பெண் விஞ்ஞானி : ராஜேஸ்வரி சட்டர்ஜி.
- முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதி : ஃபாத்திமா பீவி.
- முதல் பெண் மருத்துவர் : காதம்பினி கங்குலி.
- முதல் பெண் கிரிக்கெட் நடுவர் : அஞ்சலி ராஜகோபால்.
- முதல்பெண் ரயில் இஞ்சின் ஓட்டுனர் : சுரோகா யாதவ்.

## The Story About Happiness

Once a group of 50 people were attending a seminar. Suddenly the speaker stopped and decided to do a group activity. He started giving each attendee one balloon. Each one was asked to write his/her name on it using a marker pen. Then all the balloons were collected and put in another room.

Now these delegates were let into that room and asked to find the balloon which had their name written within 5 minutes. Everyone was frantically searching for their name, colliding with each other, pushing around others and there was utter chaos.

At the end of 5 minutes no one could find their own balloon. Now each one was asked to randomly collect a balloon and give it to the person whose name was written on it. Within minutes everyone had their own balloon.

The speaker then began, "This is happening in our lives. Everyone is frantically looking for happiness all around, not knowing where it is. Our happiness lies in the happiness of other people. Give them their happiness; you will get your own happiness. And this is the purpose of human life…the pursuit of happiness."

*Compiled By : Shahjaddhe Begum,*
*Marketing*

**நம்பித்தான் ஆகவேண்டும்**

## 5S (தொடர்ச்சி LXX)

உலகம் என்பது கட்டங்களின் தொகுப்பு

தூய்மை தொடர்பான பயிற்சி வகுப்புகள் மற்றும் விவாதங்களின் போது, சுத்தம், செய்கையில் எல்லோரும் பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றியும் விரிவாக பேச வேண்டும்.

உதாரணமாக, சில இயந்திரங்கள் அதிவேகமாக இயங்கும் போது உண்டாகும் உராய்வுச் சூட்டைத் தணிப்பதற்காக, குளுமையாக்கும் ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள். இந்த இயந்திரங்களைச் சுத்தம் செய்யும் போது, இவற்றுள் சில ரசாயனங்கள் நம் தோலில் பட்டுவிடாத படி பார்த்து கொள்ள வேண்டியிருக்கும்

வேறு சில சந்தர்ப்பங்களில், தூய்மைக்குப் பயன்படுத்தப்படும் திரவங்களே ஆபத்தானவையாக இருக்கலாம். உதாரணமாக, கழிப்பறைகளைச் சுத்தப்படுத்தும் அமிலங்களை மிகவும் கவனமாக கையாள வேண்டும். இதே போல் இன்னும் தூசுப் பிரச்சனைகள், கூர்மையான பாகங்களைத் தொடும் போது கையில் காயம் ஏற்படுதல் என்று பலவிதமான விபத்துகள் நிகழ வாய்ப்புண்டு.

இந்தப் பிரச்சனைகளைத் தவிர்க்க, கையுறைகள், முகத்துக்குத் தூதுக் கவசங்கள், தலைக்கு ஹெல்மெட்கள் போன்றவை வழங்கப்பட வேண்டும். அவற்றை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது என்பதும் தெளிவாகச் சொல்லித் தரப்படுவது அவசியம்.

அடுத்து நாம் வலியுறுத்த வேண்டிய விஷயம்–சுத்தம் என்பது குப்பையை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை.

## கவிதைகள்

### திருப்தி

யானைக்குக் கரும்புத் தோட்டமே தேவைப்படுகிறது. எறும்புக்கு சக்கையே போதுமானதாக இருக்கிறது.
தோட்டம் கிடைக்கும் போது யானையாய் இரு, சக்கை கிடைக்கும் போது எறும்பாய் இரு.
வாழ்க்கையில் திருப்தியில்லை என்ற பேச்சுக்கு இடமிருக்காது.

*Collected From Internet.*

## ஹைக்கூ

### வாழ்க்கை

வாழ்க்கையில் நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால் யாரையும் நம்பிதான் இருக்க கூடாது.

பணத்தை சம்பாதிக்க ஆரோக்கியத்தை தியாகம் செய்கிறாய். இழந்த ஆரோக்கியத்தை சம்பாதிக்க பணத்தை தியாகம் செய்கிறாய்.

*Collected From Internet.*

## சிந்தனைக்கு

- கணவன் ஊதாரியானால் பாதி வீடும், மனைவி ஊதாரியானால் முழு வீடும் அழிந்து விடும்.
- குழந்தைகளுக்கு ஆடம்பரத்தை அறிமுகம் செய்யாதீர்கள். ஒழுக்கத்தையும், பண்பையும் உழைப்பையும், நேரத்தின் அருமையையும் விதையுங்கள். வளர்ந்தவுடன் நல்லதொரு இதயத்தை அறுவடை செய்ய முடியும்.
- உழைப்பவனின் காலம் பொன்னாகிறது. உழைக்காதவனின் பொன் காலமாகிறது.

*Collected From Internet*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

## துடைப்பதும் தடுப்பதும்

ஒரு பெரிய அரசன் இருந்தான். என்ன தான் நாட்டை ஆளும் ராஜாவானாலும் அவனுக்கும் பலவிதமான பிரச்சனைகள் இருந்தன. அவற்றையெல்லாம் எப்படித் தீர்ப்பது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது, அந்த ஊருக்கு ஒரு ஞானி வந்தார். அவரிடம் சென்று வணங்கினால், எந்த குறையானாலும் தீர்த்து வைத்து விடுவார் என்று மக்கள் பரவலாகப் பேசிக் கொண்டார்கள்.

இந்தத் தகவல், அந்நாட்டின் அரசனுக்கும் எட்டியது. உடனடியாக அந்த ஞானியைத் தரிசித்து, தன்னுடைய பிரச்சனைகளிலிருந்து விமோசனம் பெறுவது என்று தீர்மானித்தான் அவன்.

மஹாராஜா வருகிறார் என்ற விவரம் தெரிந்ததும், அந்தப் பிரதேசமே பரபரப்பாகி விட்டது. ஆனால், அந்த ஞானி மட்டும் எந்த சலனமும் இல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்தார்.

குதிரையில் வந்து இறங்கிய ராஜா, ஞானியை வணங்கி, ஸ்சுவாமி, என்னுடைய குறைகளைத் தீர்த்து வையுங்கள்!' என்று பணிவோடு வேண்டினான்.

'கவலைப்படாதே ராஜா, கடவுள் நமக்கு உதவுவார்! என்று நிதானமாகப் பதில் அளித்த அந்த ஞானி, ஆனால், உன்னுடைய பிரச்சனைகள், அவற்றுக்கு அடிப்படைக் காரணங்கள் என்னென்ன என்று நான் முதலில் அறிந்து கொள்ள விரும்புகிறேன்!' என்றார்.

இதைக் கேட்டதும் ராஜாவுக்குக் கொஞ்சம் எரிச்சலாகிவிட்டது. நாட்டை ஆளுகிற அரசன் எனக்கு ஆயிரம் பிரச்சனைகள் இருக்கும் அவற்றுக்கு லட்சம் காரணங்கள் இருக்கும். அதையெல்லாம் இந்த ஆளிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? சொன்னாலும் இவருக்குப் புரிந்துவிடுமா?

(தொடரும்)

## Modern Portable Electrolyzer For Synthetic Brine Chlorination

